MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8 / MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# செல்லாத பணம் நாவலில் கூறப்படும் சமூக அவலங்கள்

**ஆய்வாளர்**

லோகேஸ்வரி. து

( பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்)

ஆர் வி எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி. சூலூர்.

**நெறியாளர்**

முனைவர் கல்பனா. சி

**உதவிப் பேராசிரியர்**, தமிழ்த்துறை

ஆர் வி எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி. சூலூர்.

## Social ills depicted in the novel Chellatha Panam

Logeshwari T.

(Part-time Postdoctoral Researcher).

Tamil Department, RVS College of Arts and Science, Sulur.

**MAY - JUNE**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**Guide**

**DR S. KALPANA**

**Asst professor of Tamil**

**R.V.S college of arts and science, sulur**

**Coimbatore**

**Abstract:**

The novel "Cellatha Panam" written by Himayam is an excellent novel for this society. The novel deals with economic problems, social problems, family problems, etc. A woman lives for her lover and her children and finally burns herself to the point that her life and her mind are hurt. Every day, ambulances carrying the bodies of the burnt people keep coming to the JIPMER Hospital in Puducherry. The plot of the story is now showing how much she is suffering from her family after falling in love and getting married. Every reader who reads "Cellatha Panam" should read it with their minds turned to stone. The author has beautifully described the ordinary people in their conversational style for this society. Through the novel "Cellatha Panam", we will see about social problems through the study.

**Key words;**

**Social Constraints, Caste Distinctions, Class Distinctions, Individual Sentiments, Family Issues, Economic Hardships, Women's Lived Realities, Issues of Honor, Patriarchy, The Value of Money.**

**ஆய்வுச் சுருக்கம்;**

இமயம் எழுதிய செல்லாத பணம் என்ற புதினம் இந்த சமூகத்திற்கான மிகச்சிறந்த ஒரு புதினம் ஆகும். இப்புதினமானது பொருளாதார சிக்கல்கள், சமூகச் சிக்கல்கள், குடும்பச் சிக்கல்கள் போன்றவற்றை எடுத்துக் கூறுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

ஒரு பெண் என்பவள் தன் காதலனுக்காகவும் தன் பிள்ளைகளுக்காகவும் வாழ்ந்து கடைசியில் தன்னையே எரித்துக் கொள்ளும் அளவிற்கு அவள் வாழ்வும் அவள் மனமும் காயப்படுகின்றது.அனுதினமும் வெந்தவர்களின் உடலை சுமந்து கொண்டு வரும் ஆம்புலன்ஸ்கள் வந்து கொண்டே இருக்கும் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை தான் இப்புதினத்தின் கதைக்களம் ஆகும். காதலித்து திருமணம் செய்து கொண்ட பிறகு தன் குடும்பத்தாலும் சமூகத்தாலும் எந்த அளவிற்கு ஒரு பெண் துன்பப்படுகிறாள் என்பதை இப்புதினம் எடுத்துக் கூறுகிறது.இந்தச் சமூகமும் இன்றைய காலகட்டத்தில் பணம் மட்டுமே அனைத்தும் என்று இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அவை எல்லாம் ஒன்றுமே இல்லை என்று செல்லாத பணம் புதினமானது இச்சமூகத்திற்கு எடுத்துக் கூறுகிறது.ஆனால் செல்லாத பணம் வாசிக்கும் ஒவ்வொரு வாசகர்களும், தன் மனதை கல்லாக்கிக் கொண்டுதான் வாசிக்க வேண்டும். சாதாரண மனிதர்களைப் பற்றி அவர்களது பேச்சு வழக்கில் மிக **அழுத்தமாகவும்** சிறப்பாக இச்சமூகத்திற்கு எடுத்துக் கூறியுள்ளார் ஆசிரியர் இமயம். செல்லாத பணம் என்றநாவலின் மூலம் இச்சமூக அவலங்கள் பற்றி ஆய்வின் மூலம் காண்போம்.

**திறவுச் சொற்கள்:**

சமூகக் கட்டுப்பாடுகள், சாதி வேறுபாடுகள், வர்க்க வேறுபாடுகள், தனிமனித உணர்வுகள்,குடும்பப் பிரச்சினைகள், பொருளாதாரச் சிக்கல்கள், பெண்ணின் வாழ்வியல் நிலை, கௌரவ பிரச்சனைகள், ஆண் ஆதிக்கம், பணத்தின் மதிப்பு

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**முன்னுரை;**

தமிழ் இலக்கிய உலகில் தன்னுடைய எதார்த்தமான எழுத்துக்களால் பெயர் பெற்றவர் எழுத்தாளர் இமயம் ஆவார்.அவருடைய முக்கியமான படைப்புகளில் ஒன்றுதான் செல்லாத பணம் என்ற புதினம் ஆகும். சமூகத்தில் நிலவக்கூடிய சாதி மற்றும் வர்க்க வேறுபாடுகள், ஆணாதிக்கம்,பணத்தின் மதிப்பு, ஒரு பெண்ணின் உரிமைகள், அவளின் மன அழுத்தங்கள் போன்றவற்றை மிக அழுத்தமாகவும் தெளிவாகவும் பேசுகிறது. தன்னுடைய சமூக அந்தஸ்துக்கு குறைவான ஒரு பர்மா அகதியை திருமணம் செய்து கொள்ளும் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடிகளையும் அவளை சுற்றி உள்ள சமூகத்தின் மதிப்புகளையும் அவள் எப்படி எதிர்கொள்கிறாள் என்பதை மிக அழுத்தமாகவும் சிறப்பாகவும் இமயம் அவர்கள் தன்னுடைய எதார்த்தமான எழுத்துக்களால் கூறியுள்ளார். அதைப் பற்றி இவ்வாய்வின் மூலம் காண்போம்.

**சமூகம் மற்றும் பொருளாதாரச் சிக்கல்கள்:**

சமூகம் என்பது ஒருவரிடம் இருக்கும் பணம், பொருள், படிப்பு என்று வசதியாக வாழ்பவனுக்கு மட்டுமே புகழ், மரியாதை என்று ஒரு பிம்பத்தை ஏற்படுத்தி வைத்துள்ளது. இச்சமூகம் தோற்றுவித்த இந்த பிம்பத்தில் மனிதன் வாழ்ந்து வருகிறான். அதில் சிறு இழுக்கு ஏற்பட்டுவிட்டாலும் தன்னை நம்பி வாழும் உயிர்களையும் தன்னையும் தானே அழித்துக் கொள்கிறான். ஒரு மனிதன் இவ்வாறு தான் வாழ வேண்டும் என்று சமூகமானது பல நியதிகளை வைத்துள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

அந்த நியதிகளில் இருந்து மனிதன் தவறிவிட்டால் சமூகத்தில் வாழும் மக்கள் மதிக்கப்பட மாட்டார்கள் இதனால் சமூக சிக்கல் ஏற்படுகிறது. செல்லாத பணம் என்ற புதினமானது இந்தச் சமூக சிக்கலைத் தான் எடுத்துக் கூறுகிறது. தன்மகள் விரும்பியவனைத் திருமணம் செய்து வைத்த குடும்பம் அதன் பிறகு அவளையும் அவள் குடும்பத்தையும் பார்த்தாலே அசிங்கம் என்று நினைத்து விலகிச் செல்கிறது. அதன் காரணம் தன் மகளான ரேவதியின் **கணவன் போதிய** பொருள் வசதியோ, படிப்பறிவோ இல்லை. அவன் சாதாரண ஆட்டோ ஓட்டுநன் ஆவான். அந்த ஆட்டோவும் மாதத் தவணையில் வாங்கி ஓட்டுபவனாக இருக்கிறான். ஆனால் ரேவதியின் தந்தை நடேசன் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆவார் .அவளின் அண்ணன் ஒரு நல்ல வேலையில் இருக்கிறான். ரேவதியும் நன்றாக படித்து பொறியியல் பட்டம் பெற்றவள் ஆவாள் ரேவதிக்கும் தன் கணவனான ரவிக்கும் இரு குழந்தைகள் இருக்கின்றனர் தங்களுடைய அன்றாட பிழைப்பிற்க்கே மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது". (குறள் எண் - 45) 1**

இக்குறட்பாவில் கூறியது போல் இல்வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாய் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் நல்ல செயல்களும் தேவைப்படுகிறது. ஆனால் ரவியின் செயலால் ரேவதியின் வாழ்க்கை தினம் தினம் துன்பப்படுகிறது .ரவி ஆட்டோ ஓட்டும் பணத்தை மதுவிற்கே செலவு செய்து வருவான். ஆகையால் ரேவதி தன் தாயிடம் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக பணம் வாங்கிக் கொள்வாள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

தன் தாயான அமராவதியும் தயக்காமல் பணம் கொடுத்து மகளுக்கு உதவி செய்கிறாள். ரேவதியின் தந்தை நடேசன் எங்கே தான் தெருவில் நடந்து செல்லும் போது உங்களுடைய மகள் கஷ்டப்படுகிறாள். அவனுக்கு ஏன் திருமணம் செய்து வைத்தீர்கள் என்று மற்றவர்கள் கேட்டு விடுவார்களோ அதனால் தன் கௌரவம் மரியாதை குறைந்து விடுமோ என்று எண்ணி அச்சப்படுகிறார். இந்த சமூகத்தையும் பொருளாதார வசதி இல்லாத தன் மகள் குடும்பத்தையும் எண்ணி பயந்து தன் மகளை விட்டு விலகிச் செல்கிறார். இங்கே பொருளாதாரச் சிக்கலும் ஒரு காரணமாக அமைகிறது.

**பகுத்தறியும் திறன் இல்லாமை:**

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரிடமும் பகுத்தறியு திறனானது இருத்தல் மிகவும் அவசியமான ஒன்றாகும். காதலுக்கும் இரக்கத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்திருந்தால் ரேவதி இவ்வளவு துன்பப்பட்டு இருக்க வேண்டாம். பொறியியல் படித்துப் பட்டம் பெற்ற ஒரு பெண்மணியை வேலைக்கு அனுப்பாமல் ரவியின் சந்தேகப் புத்தியால் அவள் வீட்டிலேயே முடக்கப்படுகிறாள். இவ்விடத்தில் ரவிக்கு பகுத்தறியும் திறன் இருந்திருந்தால் அவனும் அவனது குடும்பமும் இவ்வளவு துன்பப்பட அவசியம் இல்லாமல் இருந்திருக்கும். பாசத்திற்கும் கௌரவத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்திருந்தால் நடேசன் தன் மகளான ரேவதியை இழந்திருக்க மாட்டார். நன்றாகப் படித்து தலைமை ஆசிரியர் என்னும் பதவியில் இருக்கும் நடேசனுக்கே பகுத்தறியும் திறன் இல்லாமல் போனது ஆச்சரியத்திற்கு உட்படுத்துகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**பாசப் போராட்டம்:**

செல்லாத பணமானது பாசத்தை மிக அழகாகச் **சொல்லிச்** செல்கிறது. ரேவதி திருமணம் செய்து கொண்டு ரவியின் வீட்டிற்கு சென்ற பிறகு ரேவதியின் தாய் அமராவதியின் தவிப்பையும் அழுகையும் மிக சிறப்பாக இமையம் அவர்கள் கூறியிருக்கிறார். ஒரு கொடிய நாளில் ரேவதி அம்மா அமராவதி ரவி ஆட்டோவிற்காக வாங்கிய கடனை கட்டுவதற்காக ரூ. 30,000 கொடுக்கிறார். அதில் ரூ.500 எடுத்து ரவி மது அருந்தியதால் கோபமும் ஆத்திரமும் கொண்ட ரேவதி தன்உடம்பில் பெட்ரோல் ஊற்றிக் கொழுத்திக் கொள்கிறாள். ரேவதி தீக்குளித்த செய்தி அறிந்ததும் அமராவதியும் நடேசன் புலம்பும் இடமானது வாசகர்களின் நெஞ்சை உருக்குகிறது.

**"தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து**

**முந்தி இருப்பச் செயல்." (குறள் எண் : 67) 2**

இக்குறட்பாவில் தந்தை தன் மகளுக்கு செய்ய வேண்டிய நல்லுதவிகள் அவர்களை அறிஞர்கள் அவையில் புகழுடன் விளங்குமாறு ஆக்குதலே ஆகும். அதுபோல நடேசன் நல்ல ஆசிரியராகவும் நல்ல தந்தையாகவும் விளங்கினார். ஆனால் ரேவதி எதிர்காலம் இவ்வாறு இருக்கும் என அவர் நினைத்தது இல்லை. ரேவதி தீக்குளித்து மருத்துவமனையில் அனுமதிக்கும் வரை நடேசன் மற்றும் ரேவதி அண்ணன் முருகனுக்கும் இறங்காத மனமும் இறங்கித்தான் போகிறது. தீக்குளித்த ரேவதியை பார்த்த தாய் தந்தை அண்ணன் அண்ணி என்று அனைவரின் அழுகையும் பரிதவிப்பும் செல்லாத பண வாசகர்களின் கண்களில் கண்ணீர் வர வைக்கிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

அந்த பாசத்திற்கு இடையில் பணமானது ஒரு செல்லா பணமாகத் தான் உள்ளது. அவசர சிகிச்சை பிரிவில் இருக்கும் மருத்துவரிடம் பேசுகிறார் நடேசன்.டாக்டர் எப்படியாவது என் மகளைக் காப்பாற்றிக் கொடுங்கள் என்றும் அவரிடம் உள்ள நகைகள் பணம் அனைத்தும் டாக்டரின் மேஜையின் மீது வைத்து தன் மகளை எப்படியாவது காப்பாற்றிக் கொடுங்கள் என்கிறார். டாக்டர் ஜிப்மர் விட வேறு எங்கும் தீக்காயத்திற்கு சிறப்பாக மருத்துவம் பார்க்க முடியாது.

**"இந்த நிமிஷத்தில் இதுக்கெல்லாம் எந்த அர்த்தமும் இல்லை. இந்தப் பணம் இங்கே செல்லாது".**

எனக் கூறி சென்று விடுகிறார் டாக்டர்.

**உதவி மற்றும் இறக்க குணம்:**

ரேவதி தீக்குளித்தது காவல்துறையில் அரசு வழக்காக மாறிவிட்டது. காவல்துறையிலிருந்து விசாரிக்க ஏட்டு கணேசனும் கான்ஸ்டபிள் ஆனந்தகுமாரும் நடேசனிடம் பணம் வாங்கிவிட்டு பிறகு ரேவதி இறந்துவிட்டால் எனத் தெரிந்த பிறகு கான்ஸ்டபிள் ஆனந்தகுமார் அந்த பணத்தை திருப்பி நடேசனிடம் கொடுக்கும் பொழுது அந்த இடத்தில் பணமானது செல்லாத பணமாகிறது.

**" இந்த உலகத்துல பெருசு கடல்னு சொல்லுவாங்க ஆனா ரொம்ப**

**பெருசு தாய் தான்",**

என்று ஆனந்தகுமார் கூறும் இடமானது கண் கலங்க வைக்கின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

மருத்துவமனையில் ரேவதி இறந்த பிறகு காவல்துறையிலிருந்து காவலர்கள் வந்து வழக்கை முடித்தால் தான் பிரேதத்தை வாங்க முடியும். ஆகையால் நடேசன் காவல் நிலையம் சென்று ஒவ்வொருவரிடமும் நடந்ததை சொல்லி மன்றாடும் காட்சிகள் சிறப்பு. அங்கே அவரிடம் படித்த மாணவர்கள் வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனாலும் கட்சி பாகுபாடின்றி அவருக்கு உதவி செய்ய முன் வருகின்றனர். இந்த இடத்தில் பணம் ஒரு செல்லாத பணமாகிறது.மருத்துவமனைக்குச் சென்று காவல்துறை ஆய்வாளர் வழக்கை முடித்து கொடுக்கும் பொழுது நடேசன் பணத்தை கொடுக்கிறார். நீங்கள் மகளை இழந்து வாடுகிறீர்கள் எனக்கு பணம் வேண்டாம் என காவல்துறை ஆய்வாளர் மறுத்து விடுகிறார். தன் மகள் இருக்கும்பொழுது அவளுக்கு பயன்படுத்த யோசனை செய்த நடேசன் அவள் இறந்த பிறகு பணத்தை கட்டுக்கட்டாக வைத்துக் கொண்டு செலவு செய்ய நினைக்கிறார். ஆனால் அவை அனைத்தும் செல்லாத பணமாகி விடுகிறது.

**கௌரவக் கொலை:**

செல்லாத பணம் புதினத்தில் ரேவதி இறந்தது ஒரு கௌரவ கொலையே ஆகும். இன்றைய காலகட்டத்தில் கௌரவம் மற்றும் ஆணவக் கொலைகள் நடந்து கொண்டு தான் உள்ளது. ஒருவரை கொல்ல நினைத்தால் கத்தியோ அருவாளோ அல்லது துப்பாக்கி எடுத்தோ கொல்ல வேண்டும் என்கிற அவசியம் கிடையாது. ஒருவர் நடந்து கொள்ளும் விதம் பேச்சு விலகிச்செல்லுதல் என்று பலவாறு ஒருவரை மனதளவில் துன்பப்படுத்திக் கொல்ல முடியும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இப்புதினத்தில் வரும் ரேவதியின் கதாபாத்திரம் மிகவும் அழுத்தமாகவும் சிறப்பாகவும் எடுத்துச்சொல்கிறது.

நடேசனும் அவரது மகனான முருகனும் அசிங்கம் என்று ரேவதியையும் அவளது குடும்பத்தையும் விட்டு விலகிச் செல்லாமல் இருந்திருக்கலாம். அவளுக்கு பணம் கொடுத்து பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் போட்டிருக்கலாம். அவளும் தன் குடும்பத்தோடும் மகிழ்ச்சியாக வாழ்ந்திருப்பாள். தன்னுடைய தந்தையும் அண்ணனும் தன்னை விட்டு விலகிச் செல்கிறார்களே தன்னுடன் சிறுவயதில் இருந்தே என்னை கொஞ்சி மகிழ்ந்தவர்கள் பாராட்டி சீராட்டி வளர்த்தவர்கள் தன்னை விட்டு பிரிந்து விலகிச் செல்கிறார்களே எனத் தெரிந்த அன்றே அவள் மனதளவில் இறந்து விட்டாள். இதன் பெயரும் ஒருவித கௌரவ கொலையே ஆகும். இரவியின் கதாபாத்திரம் முருகனின் மனைவி அருள்மொழி இடம் பேசும் பொழுது ரேவதியின் அப்பாவும் அண்ணனும் அவளை என்றோ கொன்று விட்டனர்.

**"நான்தெனம் அவ ஒடம்புலதான் அடிச்ச நீங்க மனசுல அடிச்சீங்க".** இப்பொழுது ரேவதியின் அப்பா நடேசன் கட்டுக்கட்டாக பணத்தை வைத்து அழைக்கிறாரே அவள் உயிரோடு இருக்கும் பொழுது எங்களை அழைத்து பேசி பணத்தைக் கொடுத்திருந்தால் நாங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்திருப்போம் என்று கூறுவான்.

**"வேண்டாத ஜாதி இருட்டு வெளுப்பதற்கு தூண்டா விளக்காய் துலங்கும் பெருமாட்டி", (பக்க எண்- 77, பா.வ. 17-18) 3**

இப்பாடலில் ஆணும் பெண்ணும் காதல் வயப்படுகிறார்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

உயிர் ஒன்றிய நிலையில் அவர்களுக்குள் அன்பும் காதலும் வளரும். அப்போது அந்த காதல் என்னும் செடியை வெட்ட சாதி என்னும்கோடாரி தேவைப்படுகிறது. இதே போல் தான் ரேவதியின் காதல் சாதி என்னும் கோடாரியால் வெட்டப்படுகிறது .ஏனென்றால் ரேவதியின் கணவர் ஒரு பர்மா அகதி ஆவான்.ஆட்டோக்கார பையன் என்று விலக்கி வைக்கிறார்கள். இன்று அவர் வைத்திருக்கும் பணம் இனி செல்லாது என்று மிக அழகாகவும் **அழுத்தமாகவும்** அந்த உரையாடல் அமைந்திருக்கும். அமராவதி பணத்தை கொடுத்து மகளுக்கு உதவி செய்தாள். ஆனால் அதை எடுத்து ரவி மது அருந்திய கோபத்தில் ரேவதி தீக்குளித்து விடுவாள். அந்த இடத்தில் பணமே இப்படி ஒரு முடிவை எடுக்க வைத்திருக்கும். **ஆகவே** இது ஒரு கௌரவ கொலையே ஆகும்.

**முடிவுரை:**

செல்லாத பணம் புதினமானது ரேவதி என்ற கதாபாத்திரத்தின் மூலமாக காதல்,திருமணம்,சாதி மற்றும் வர்க்க வேறுபாடுகள் போன்ற உணர்வுகளுக்கு இடையே சிக்கித் தவிக்கும் ஒரு பெண்ணின் அவல நிலையை எடுத்துக் கூறுகிறது.இன்றைய காலகட்டத்தில் கல்வி அறிவும் பொருளாதார சுதந்திரம் இருந்தும் பெண்களின் வாழ்வு இன்னும் சமூக மற்றும் குடும்ப ஆதிக்கத்திற்கு உட்பட்டே உள்ளது என்பதை உணர முடிகிறது. ரேவதியின் முடிவுகள் தவறாக இருக்கலாம். ஆனால் அதற்கான காரணம் அவளை சுற்றியுள்ள சமூகச் சூழல்தான் காரணமாகும். செல்லாத பண புதினமானது சமூக கட்டமைப்பால் நசுக்கப்படும் அனைத்து பெண்களின் குரலாக இருக்கிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**துணை நின்ற நூல்கள்**

1.கைலாசபதி தமிழ் நாவல் இலக்கியம் குமரன் பப்ளிஷர்ஸ்- சென்னை மின் பதிப்பு 1999.

2. வெங்கடாசலபதி அ இ ரா நாவலும் வாசிப்பும் காலச்சுவடு. பதிப்பகம் நாகர்கோவில் -2002.

3.மு.பெரி.மு. ராமசாமி. ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் சென்னை.

4. பாரதிதாசன் கவிதைகள். பூம்புகார் பதிப்பகம் சென்னை - 1992.

5. காலம்தோறும் பெண். இராஜம் கிருஷ்ணன்.காலச்சுவடு பதிப்பகம்- 2013.

**அடிக்குறிப்புகள்**

1.திருவள்ளுவர் திருக்குறள் குறள்:45. அறத்துப்பால்- இல்லறவியல். உரையாசிரியர் மு.பெரி.மு.இராமசாமி ஸ்ரீ இந்து பதிப்பகம் சென்னை. பக்க எண்: 11.

2.திருவள்ளுவர் திருக்குறள் குறள் எண்: 65. அறத்துப்பால் இல்லறவியல். உரையாசிரியர் மு.பெரி.மு.இராமசாமி ஸ்ரீ இந்து பதிப்பகம் சென்னை. பக்க எண்: 15.

3.பாரதிதாசன் கவிதைகள்.பா.வ.17-18, ப. எண்:77.பூம்புகார் பதிப்பகம் சென்னை.